

பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு139க்குட்பட்ட மேற்கு ஜாபர்கான்பேட்டை, சென்னை உயர்நிலைப் பள்ளியில் நேற்று (01.08.2023) நடைபெற்ற குப்பைகளை மக்கும், மக்காத குப்பைகளாக தரம் பிரித்து வழங்குதல் உள்ளிட்ட திடக்கழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வு பயிற்சியில் கலந்து கொண்ட மாணவ, மாணவியர் மற்றும் ஆசிரியர்களுக்கு மேயர் திருமதி ஆர்.பிரியா சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் ப.சுப்பிரமணி, உர்பேசர் சுமீத் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி மஹ்மூத் சைட், மண்டல அலுவலர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி, பெருங்குடி மண்டலம், வார்டு185க்குட்பட்ட உள்ளகரம், குபேரன் முனுசாமி தெருவில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளை துணை மேயர் மு.மகேஷ்குமார் நேற்று (01.08.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, தெற்கு வட்டார துணை ஆணையாளர் எம்.பி.அமித், மண்டலக்குழுத் தலைவர் பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்ரதிரன், தலைமைப் பொறியாளர் (பொது) எஸ்.ராஜேந்திரன், மண்டல அலுவலர் உட்பட அலுவலர்கள் உடனிருந்தனர்.

### திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக

# மாணவர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கான விண்ணப்பங்கள்!

## மாவட்டக் கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு

*திருவள்ளூர், ஆக. 2 -*

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக மாணவர் அணி ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகங்களுக்கு அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது மாவட்டக் கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ., அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார். இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:



திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி பேரூர் கழக மாணவர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இப்பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்போர் ஆவடி திருமலைராஜபுரம் ஆவடி ரயில் நிலைய அருகில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் இன்று 02082023 புதன் கிழமை காலை 9.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை மாநில மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் தலைமையில் மாநில மாணவரணி இணைச் செயலாளர் சி. ஜெரால்டு முன்னிலையில்விண்ணப்ப படிவங்கள் வழங்கப்படுகிறது. படிவங்களை பூர்த்தி செய்து அதனை ஆகஸ்ட் 10 ஆம் தேதிமதியம் 1.00மணிக்குள் மாவட்டக் கழக அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

குறிப்பு: ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகங்களில் மாணவர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு விண்ணாப்பிப்போர் 30 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். கல்விச் சான்றிதழ் நகல், வாக்காளர் அடையாள அட்டை நகல், ஆதார் அட்டை நகல் உள்ளிட்ட ஆவணங்களை விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். கடவுச்சீட்டு(பாஸ்போட்) அளவு வண்ணப் புகைப்படம் விண்ணபத்தில் ஒட்டப்பட வேண்டும். ஏற்கனவே இப்பொறுப்புகளில் உள்ள தற்போதைய அமைப்பாளர், துணை அமைப்பாளர்களும் மீண்டும் அப்பொறுப்புகளுக்கு வர விரும்பினால், அவர்களும் அவசியம் விண்ண ப்பிக்க வேண்டும். விண்ணப்பித்தில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் தெளிவாகவும், முழுமையாகவும் நிரப்ப வேண்டும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சரும் மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ.. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### கே.முரளி ஏற்பாடு ! என்.மருதுகணேஷ் தலைமை ! ஜெபதாஸ்பாண்டியன் முன்னிலை !

# சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் 500 ஏழை எளியோருக்கு உணவு !

## தா.இளையஅருணா, ஜே.ஜே.எபினேசர் வழங்கினர் !

*சென்னை ஆக:2*

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் தொடக்கத்தையொட்டி சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் தொடர் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. அவற்றில் நான்காவது நிகழ்ச்சியாக ஏழை எளியோருக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சி குமரன் நகர் 3வது தெரு தண்டையார் பேட்டையில் பகுதி வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் கே.முரளி ஏற்பாட்டில் நடைபெற்றது.

வட்டச் செயலாளர் கே. தேவன்,பகுதி அமைப்பாளர்கள் எஸ்.சரவணகுமார், எஸ். சேகர் ஆகியோர் வரவேற்றனர்.மாவட்ட அமைப்பாளர் என்.மருதுகணேஷ் தலைமை வகித்தார். பகுதிசெயலாளர் எஸ். ஜெபதாஸ் பாண்டியன், முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, ஆகியோர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி ஏழைஎளியோருக்கு உணவு வழங்கினர்.

இதில் மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன்,டாக்டர் கலைவாணன்,விமலா மோகன், மாஸ். டி.வெங்கடேசன், எம்.கோவிந்தராஜன், எம்.லோகநாதன், பி.சீனிவாசன், இ.ரவிக்குமார், எஸ்.எல்.சுந்தர், ஆர்.ஏ.எம்.சசிகுமார், ஜி.ஏழுமலை, ஜி.ராஜா, ஜி.ஜானகிராமன், என்ஃபீல்டு துரைராஜ், டி.சங்கர், நீலிமா இரவிக்குமார் , சசிகுமார், என். முருகேசன், எஸ்.நரேந்திரகுமார், பா.தேவராஜ், என்.லோகநாதன், ஆர்.தன்ராஜ், சேகர், பிரபு, ஆர்.மணிமாறன், விமல் ராஜ்,ஒய்.கிரி, பாபு, ஜெயராஜ், எம்.பொன்ராஜ், ஜி.பாபு,இளமந்தையா, சண்முகம், வினோத்,கதிரவன், நாவலர் நகர் முருகன், டி.ரஞ்சித், ஆர். லாவண்யா, எம்.திருமகள், தீபக், மற்றும் கழக முன்னோடிகள் . கழக தோழர்கள், தோழியர்கள் பலர் பங்கேற்றனர்.

### சென்னை உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும்

# மாணவர்களுக்கு திடக்கழிவுகள் கையாள்வது குறித்து விழிப்புணர்வு பயிற்சி!

## மேயர் ஆர்.பிரியா தலைமையில் கோடம்பாக்கம் மண்டலத்தில் நடைபெற்றது!

*சென்னை, ஆக 2 -*

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நாள்தோறும் சராசரியாக 5,900 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் சேகரிக்கப்பட்டு வருகிறது. மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்கள் மூலமாக நாள்தோறும் வீடுகளுக்குச் சென்று குப்பைகள் மக்கும், மக்காத குப்பைகளாக தரம் பிரித்து பெறப்படுகின்றன. மேலும், பொது இடங்களில் குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டு சேகரிக்கப்படும் குப்பைகளும் தரம் பிரிக்கப்படுகின்றன.

மாநகராட்சியின் குப்பை கொட்டும் வளாகங்களுக்கு செல்லும் குப்பைகளின் அளவைக் குறைப்பதற்கும், Zero Waste என்ற இலக்கினை நோக்கி செல்வதற்கும் மாநகராட்சியின் சார்பில் பல்வேறு திட்டங்களின் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இதுகுறித்த விழிப்புணர்வினை பொதுமக்களுக்கும், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியருக்கும் ஏற்படுத்திடவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு 139க்குட்பட்ட மேற்கு ஜாபர்கான் பேட்டை, சென்னை உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியருக்கு திடக்கழிவுகளை முறையாக கையாளுவது குறித்தும், குப்பைகளை மக்கும், மக்காத குப்பைகளாக தரம் பிரித்து வழங்குவது குறித்தும் விழிப்புணர்வினை ஏற்படுத்திடும் வகையில் நடைபெற்ற பயிற்சியினை மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் நேற்று (01.08.2023) தொடங்கி வைத்துப் பங்கேற்றார்.

இந்நிகழ்வில் மேயர் அவர்கள் பேசும்போது, “ஒவ்வொரு மாணவர்களும் சுகாதாரத் தூதுவர்களாக செயல்பட்டு, குப்பைகளை மக்கும், மக்காத குப்பைகளாக தரம் பிரித்து வழங்குதல் குறித்தும், இருப்பிடத்தையும் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்திருத்தல் குறித்தும் தமது குடும்பத்தினரிடத்திலும் மக்களிடத்திலும் எடுத்துக் கூறி விழிப்புணர்வினை ஏற்படுத்திட வேண்டும்” என்று தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, இந்த விழிப்புணர்வு பயிற்சியில் கலந்து கொண்ட மாணவ, மாணவியர் மற்றும் ஆசிரியர்களுக்கு மாண்புமிகு மேயர் அவர்கள் சான்றிதழ்களை வழங்கினார். மேலும், குப்பைகளை தரம் பிரித்து அகற்றுதல் குறித்தும், சுற்றுப்புற மேம்பாடு குறித்தும் மாண வர்கள் வரைந்த ஓவியத்தினை மாண்புமிகு மேயர் அவர்கள் பார்வையிட்டு பாராட்டினார்.

முன்னதாக, இந்தப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பங்களை பதிவு செய்யும் முகாமினை மேயர் பார்வையிட்டு, விண்ணப்பங்கள் சரியான முறையில் பதிவு செய்யப்படுகிறதா என ஆய்வு மேற்கொண்டு, அங்குள்ள பொதுமக்களுடன் கலந்துரையாடினார்.

இந்நிகழ்ச்சியில் மண்டலக்குழுத் தலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் ப.சுப்பிரமணி, உர்பேசர் சுமீத் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி திரு.மஹ்மூத் சைட், மண்டல அலுவலர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.







இவண்:177 வது வட்ட தி.மு.க.
வேளச்சேரி மேற்கு பகுதி - சென்னை தெற்கு மாவட்டம்